பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 05 | வெள்ளிக்கிழமை | 18.04.2025 | அதிர்வு 256

## வடக்கிலும் கடத்தல்காரர்கள்; விரைவில் சட்ட நடவடிக்கை!

### அமைச்சர் சந்திரசேகர் உறுதி



"வடக்கிலும் மண் கடத்தல் காரர்கள் உள் ளார்கள். ஆட்களைக் கடத்தியவர்கள் உள் ளார்கள். ஊடக

07





# ஜனாதிபதி அநுர தேர்தல் இலஞ்சம்!

## சீறுகின்றார் சுமந்திரன்

06

### வடக்கு, தெற்கு அரசியல்வாதிகள் தலையிடாவிட்டால்

# திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்கு இலகுவாகத் தீர்வு காண முடியும்!

## யாழ்.பரப்புரைக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு



(பிரபாகரன் டிலக்சன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

"திஸ்ஸ விகாரை பிரச்சினையில் தலையிடும் வடக்கு அரசியல்வாதிகள் விலக வேண்டும். இதை வைத்து தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படும் இனவாத அரசியல் நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறு அரசியலை நீக்கினால் இந்தப் பிரச்சினைக்கு இலகுவாகத் தீர்வு காண முடியும்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நல்லூர் கிட்டு பூங்காவில் நடைபெற்ற தேர்தல்

07




நேற்று 'மாலை முரசு' இரண்டாம் பக்கத்தில் 'பிள்ளையான்தான் தேசப்பற்றாளன்; அடித்துக் கூறுகின்றார் உதய கம்மன்பில' என்று ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

அதை வாசித்து விட்டு வெளிநாட்டிலிருந்து வயதில் மூத்த ஒரு நண்பர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். அவர் அது குறித்து என்னோடு உரையாடிய விடயங்களை உங்களுடன் பகிர்வதற்கு முன்னர், இந்த விடயத்தை ஒட்டி என் நினைவுக்கு வந்த எனது இளமைக்கால அனுபவம் ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமானது என நினைக்கிறேன்.

அப்போது எனக்கு 17 அல்லது 18 வயது இருக்கலாம். 1976 அல்லது 1977 ஆரம்பமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அதுவரை காலமும் எனது சொந்த ஊரான திருகோணமலையின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இலங்கைத் தமிழரசு கட்சியின் நேமிநாதன் 1977 பொதுத்தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவு எடுத்திருந்தார்.

06





# படை வசமுள்ள காணிகளை விடுவிப்போம்!



## யாழில் ஜனாதிபதி உறுதி

(பிரபாகரன் டிலக்சன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

"யுத்த காலத்தில் மக்களின் காணிகள் பாதுகாப்புக் காரணங்களுக்காகச் சுவீகரிக்கப்பட்டது. ஆனால், பாதுகாப்புக் காரணங்கள் எனக் கூறிக்கொண்டு இனியும் மக்களின் காணிகளை வைத்திருப்பதை நாம் விரும்பவில்லை. விடுவிக்கக் கூடிய எல்லாக் காணிகளையும் நாங்கள் விடுவிப்போம்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நல்லூர் கிட்டு பூங்காவில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணம் மக்கள் வழங்கிய ஆதரக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முன்னைய காலங்களில் வடக்கில் மக்கள் தமிழ்க் கட்சிகளைத் தெரிவு செய்தார்கள். கிழக்கில் முஸ்லிம் கட்சிகளைத் தெரிவு செய்தார்கள். தெற்கில் சிங்களக் கட்சிகளைத் தெரிவு செய்தார்கள். எல்லாத் தேர்தல்களிலும் மக்கள் பிரித்தாளப்பட்டனர். ஆனால், கடந்த பொதுத்தேர்தலில் வடக்கு, கிழக்கு, தெற்கு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு தேசிய மக்கள் சக்தியைத் தெரிவு செய்தார்கள்.

தேசிய மக்கள் சக்தி அரசானது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாழக்கூடிய ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும்.

நாங்கள் ஒருவருக்கு ஒருவர் சந்தேகத்துடன் இருந்தோம். ஒருவருக்கொருவர் பகைமையுடன் இருந்தோம். இறுதியில் போர் புரிந்தோம். உறவுகளை இழந்து அழிவு மட்டுமே ஏற்பட்டது. அந்த நிலைமை மீண்டும் வேண்டுமா? எங்கள் தலைமுறையோடு யுத்தம் முடிவடைந்துவிட்டது. எங்கள் பிள்ளைகள் அமைதியான சூழலில் வாழ்வதற்கான நாட்டை தேசிய மக்கள் சக்தி உருவாக்கும்.

யாழ்ப்பாணத்தில் பாரம்பரிய கட்சிகளைப் புறக்கணித்து மக்கள் எங்களைத் தெரிவு செய்தார்கள். எங்கள் மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள். எந்தவொரு சூழ்நிலையிலும் எங்கள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை வீணடிக்க மாட்டோம்.

யுத்த காலத்தில் மக்களின் காணிகள் பாதுகாப்புக் காரணங்களுக்காகச் சுவீகரிக்கப்பட்டது. ஆனால், பாதுகாப்புக் காரணங்கள் எனக் கூறிக்கொண்டு இனியும் மக்களின் காணிகளை வைத்திருப்பதை நாம் விரும்பவில்லை. விடுவிக்கக் கூடிய எல்லாக் காணிகளையும் நாங்கள் விடுவிப்போம்.

முன்னைய ஆட்சியாளர்கள் பாதுகாப்புப் படையினர் வசம் உள்ள காணிகளை விடுவிக்காது, மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படலாம் அச்சத்தில் இருந்தார்கள். ஆனால், நாட்டில் இன்னும் ஒரு யுத்தம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் எங்கள் அரசு செயற்படவில்லை. நாங்கள் நாட்டில் இன்னொரு போர் உருவாகும் நிலையை தடுக்கும் வகையிலே செயற்பட்டு வருகின்றோம்.

இந்தப் பிரதேசங்களில் வீதிகள் மூடப்பட்டிருக்கின்றன. அதனைப் படிப்படியாகத் திறப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். கொழும்பில் ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் உள்ள வீதிகளை மக்கள் பாவனைக்காகத் திறந்து வைத்தோம். அந்தப் பாதைகளைத் திறக்க முடியுமாக இருந்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள பாதைகளை மூடிவைத்திருப்பது சரியானது அல்ல.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் வலிகளை நான் உணர்ந்திருக்கின்றேன். சாதாரணமாக ஒருவர் இறந்தால் அவருக்கான இறுதிச் சடங்குகளைச் செய்கின்றோம். சில நாட்கள் அவருக்காகக் கண்ணீர் சிந்துகின்றோம். பின் நாம் ஆறுதல் அடைகின்றோம். ஆனால், ஒருவர் காணாமல் போனால் அவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பது பெரும் வேதனையான விடயம். என்னுடைய சகோதரர் ஒருவரும் காணாமல்போயிருக்கின்றார்.

எனவே, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் வேதனையைப் போக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும். அரசு என்ற வகையில் எமக்கு அந்தக் கடமை உள்ளது.

தொடர்ச்சி▼







# படை வசமுள்ள காணிகளை விடுவிப்போம்!



## யாழில் ஜனாதிபதி உறுதி

தொடர்ச்சி▲

கடந்த ஆட்சியாளர்கள் நாட்டை முழுவதுமாகச் சீரழித்திருக்கின்றார்கள். நாங்கள் படிப்படியாக நாட்டைக் கட்டி எழுப்பி வருகின்றோம். தற்போது நாட்டுக்கு அந்நியச் செலாவணியைக் கொண்டு வந்திருக்கின்றோம். கட்டுநாயக்க விமான நிலையப் புனரமைப்பு உட்பட பல செயற்றிட்டங்களை ஆரம்பித்திருக்கின்றோம்.

இந்தியக் கடன் உதவியோடு ரயில் பாதை புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த சில தினங்களுக்கு முன் இந்தியப் பிரதமர் இலங்கை வந்தபோது அவருடன் கலந்துரையாடி அந்தக் கடனை அன்பளிப்பாக மாற்றியிருக்கின்றோம்.

நாட்டில் அஸ்வசும கொடுப்பனவு தகுதியான அனைவருக்கும் கொடுக்கப்படவில்லை. ஜுன் மாதத்திலிருந்து புதிதாக ஆறு இலட்சம் மக்களுக்கு அஸ்வசும கொடுப்பவை வழங்கத் தீர்மானித்திருக்கின்றோம்.

முப்பதாயிரம் பேரை அரச சேவையில் இணைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளோம். அரச சேவையில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லை. எனவே, குறிப்பிட்டளவினரைத் தமிழ் மொழி உத்தியோகத்தர்கள் நியமனத்திற்கு ஒதுக்கவுள்ளோம். பொலிஸ் சேவையிலும் தமிழ் மொழி உத்தியோகத்தர்களை நியமிக்கவுள்ளோம்.

காங்கேசன்துறையில் ஜனாதிபதி மாளிகை உள்ளது. எனக்கு ஜனாதிபதி மாளிகை தேவையில்லை. இந்தக் கட்டடத்தை மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தத் தீர்மானித்திருக்கின்றோம்.

யாழ்ப்பாணம் நூலகம் அழிக்கப்பட்டது. இனவாதத்தின் உச்சக்கட்டமாக அது அமைந்தது. அதனைப் புனரமைக்க பத்து கோடி ரூபாவை ஒதுங்கியிருக்கின்றோம். அது போல் வீதிகள் புனரமைப்புக்காகவும் பெருமளவான நிதியை ஒதுக்கியுள்ளோம்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு விசாலமான கட்டடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கட்டடத்தை முழுமையாகப் பூர்த்தி செய்தபின் அதில் எவ்வாறான பணிகளை மேற்கொள்ளப் போகின்றோம் எனத் தெரியாமல் இருக்கின்றோம். அந்தளவுக்கு விசாலமானது. இந்த வருடத்திலிருந்து அதனை இயங்கவைக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் பல்வேறு சுற்றுலாத்தலங்களைக் கொண்டிருந்தாலும் தென்னிலங்கையோடு ஒப்பிடுகையில் சுற்றுலாப்

தொடர்ச்சி▼





# படை வசமுள்ள காணிகளை விடுவிப்போம்!

## யாழில் ஜனாதிபதி உறுதி

தொடர்ச்சி▲

பயணிகளுடைய எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது. சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய உள்ளூர் விமான சேவையைப் பலப்படுத்த வேண்டும்.

வடக்கு கடலில் அத்துமீறி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு சூழலும் மாசடைகின்றது. இந்தியப் பிரதமர் மோடியோடு அண்மையில் உரையாடும் போது மீனவர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு தேவை எனத் தெரிவித்தேன். வடக்கு கடல் வடக்கு மக்களுக்குச் சொந்தமானது. கடலைப் பாதுகாப்பதற்கு எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கடற்படையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

1983இல் இருந்து அதிகமான தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து சென்றிருக்கின்றார்கள். அவர்கள் தற்போது பெரும் செல்வந்தர்களாக இருக்கின்றார்கள். உங்கள் சொந்த இடத்தைக் கட்டியெழுப்ப முதலீடு செய்யுங்கள். மீண்டும் இலங்கைக்குத் திரும்புங்கள். இந்த நாடு பாதுகாப்பானது. இங்கு இனவாதம் இல்லை. அனைவருடைய உரிமைகளும் பாதுகாக்கப்படும். பழைய கறுப்புப் பக்கங்களை மறந்துவிட்டு புதிய அத்தியாயத்தை எழுதுவோம்.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மக்களின் பணத்தில் ஒரு சதத்தைக் கூட வீணடிக்கமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை நான் தருகின்றேன். முன்னைய காலத்தில் ஊழல்களைச் செய்த பலர் மீது வழக்குகளைத் தாக்கல் செய்து வருகின்றோம்.

ஜனாதிபதியாகவும், நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மையாகவும் தேசிய மக்கள் சக்தி காணப்படுகையில், மேல் மட்டத்தில் எடுக்கும் முடிவுகளை கிராம் மட்டத்தில் நிறைவேற்ற உள்ளூராட்சி மன்றங்கள் அவசியமானவை.

கடந்த அரசுகளிடம் போதியளவு நிதி இருக்கவில்லை. எங்களிடம் போதுமான நிதி இருக்கின்றது. அடுத்த வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க இருக்கின்றோம். உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டால் அதற்குரிய நிதியை விடுவிக்கத் தயாராகவுள்ளோம். முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்படும்போது உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியில் இருப்பவர்கள் யார் என்பதைப் பார்த்தே நாங்கள் நிதியை ஒதுக்குவோம்.

உள்ளூராட்சி மன்றங்களில் தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சியிலிருந்தால் நாங்கள் கண்ணை மூடிக்கொண்டு நிதியை ஒதுக்குவோம். ஏனெனில் இவர்கள் நிதியைக் களவாடமாட்டார்கள், வீண்விரயம் செய்யமாட்டார்கள். ஆனால், வேறு கட்சிகள் ஆட்சியில் இருந்தால் நாங்கள் பலமுறை சிந்திக்க வேண்டும். எனவே, உள்ளூராட்சி மன்றங்களில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களைத் தெரிவு செய்யுங்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளையும் வெற்றி கொள்வோம். புதிய அத்தியாயத்தை உருவாக்குவோம். எங்களுக்கு வாக்களிக்காமல் வேறு யாருக்கு வாக்களிக்கப் போகின்றீர்கள்? எங்களைவிட ஒரு நல்ல கட்சியைச் சொல்ல முடியுமா? கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்தார்கள். அந்த நம்பிக்கையைமகைவிடப் போகின்றீர்களா?

யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் மைதானத்தை அமைக்கவுள்ளோம். எங்கள் ஆட்சியில் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் இணைந்து தேசிய கிரிக்கெட்டில் விளையாடக்கூடிய அணியைக் கட்டியெழுப்புவோம்.

மாங்குளம், பரந்தன், காங்கேசன்துறையில் கைத்தொழில் முதலீட்டு வலயங்களை அமைக்கவுள்ளோம். இதனால் பலருக்குத் தொழில் வாய்ப்பு அதிகரிக்கும். இனவாதத்தைத் தோற்கடித்து நாங்கள் ஒற்றுமையான நாட்டைக் கட்டியெழுப்புவோம்." - என்றார்.






# வசாவிளானில் ஊடக சந்திப்புக்கு வந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட பொலிஸார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை வைப்பதற்கான ஊடக சந்திப்புக்கு வந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்ட சம்பவம் நேற்று இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பாக வலிகாமம் வடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் வசாவிளான் சந்தியில் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது .

ஊடகவியலாளர் சந்திப்பு ஆரம்பமாவதற்கு முன்னதாக அங்கு வந்த பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இது உயர் பாதுகாப்பு வலயம் எனவும், இங்கு கூட்டம் கூட முடியாது எனவும் ஊடக சந்திப்பு ஏற்பாட்டாளர்களுடன் பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முரண்பாட்டில் ஈடுபட்டார்.



தாம் எமது காணிகள் விடுவிப்பை வலியுறுத்தி ஊடக சந்திப்பை நடத்தவே தாம் வந்ததாகவும், போராட்டத்தில் ஈடுபடவில்லை என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களின் தேசிய அடையாள அட்டையை வாங்கி பெயர்களைப் பதிவு செய்த பொலிஸார் அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தவர்களைக் காணொளி மற்றும் புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர்.

இவற்றைக் காணொளி எடுத்த ஊடகவியலாளர்களையும் பொலிஸார் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தும் வகையில் காணொளி எடுத்தனர்.

ஊடகவியலாளர் சந்திப்பை முடித்து விரைவாக செல்லுமாறு அங்கு வந்திருந்தவர்களுடன் பொலிஸார் தொடர்ச்சியாகத் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.








## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் அடுத்த வேட்பாளர் யார் என்ற கேள்வி எழுந்த நேரம் அது. சம்பந்தனின் பெயர் அந்த இடத்துக்கு அச்சமயத்தில் அடிபடவில்லை. மூதூர் எம்.பியாக இருக்கும் தங்கத்துரை சில சமயங்களில் திருகோணமலை தமிழரசு வேட்பாளராக நிற்கக் கூடும் என்று பேச்சு அடிபட்டதாக நினைவு.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகி யிருந்த வேளை அது என்றும் நினைக் கிறேன். கட்சியின் பிரதான பேச்சாள ராக அமிர்தலிங்கம் இருந்தார். அவர் அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் அல்லர். ஆனால் கூட்டங்களில் அவரது பேச்சை செவிமடுப்பதற்கு மக்கள் திரள் வது வழமை.

திருகோணமலையில் முற்றவெளி யில் ஒரு பொதுக்கூட்டம். முன்னிரவு நேரம்.அந்த வேளையில் அரசியல் ஈடுபாடு இல்லாவிட்டாலும் வேடிக்கை பார்ப்பதற்காக அத்தகைய கூட்டங்க ளுக்கு நான் ஆஜராகி விடுவது உண்டு. கூட்டணியின் அந்தக் கூட்டங்களில் கடைசியில் அமிர்தலிங்கம் பேசுவார். அவர் பேசி முடிந்த பின்னர் பொது மக்களின் கேள்வி நேரம். பொதுமக்கள் தங்கள் கேள்விகளை தாளில் எழுதி மேடைக்கு அனுப்புவார்கள். மேடையின் ஒரு புறத்தில் இருந்து அமிர்தலிங்கம் பதிலளிக்க, மறுபக்கத்தில் நின்று ஒருவர் ஒவ்வொரு கேள்வியாக வாசிப்பார். இது அந்த காலத்தில் ஒரு முறைமை. அந்தக் கேள்வி – பதிலை செவிமடுப்பதற்காக கூட்டம் காத்திருக்கும்.

எந்தக் கேள்விக்கும் சிலேடையான – நையாண்டியான – ஒரு பழமொழி யோடு பதில் சொல்லுவார் அமிர்தலிங் கம். கேள்வி கேட்டு முடிப்பதற்கு இடை யில் அவரது பதில் சடார் என்ற வேகத் தில் வரும்.

ஏற்கனவே திருகோணமலை தொகு தியில் தமிழரசுக்கு எதிராக ஐக்கிய தேசி யக் கட்சியில் ஒருவர் அடிக்கடி பிரதான வேட்பாளராக முன்னிலையில் அங்கு போட்டியிட்டு வந்தார். அவரும் எனக்கு ஒரு வகையில் உறவினரே. அவரது மகனும் அன்றைக்குக் கூட்டத்துக்கு வந்திருந் தார். சற்றுத் தொலைவில் எங்களு டைய திருகோணமலை செய்தியாளர் சி. குருநாதன் தமது சைக்கிளோடு நின்றபடி கூட்டச் செய்திகளைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத் தில் அந்த ஐ.தே.க. பிரமுகரின் மகன் நின்றார்.

நேமிநாதன் இம்முறை போட்டியிடா விட்டால் அந்த இடத்துக்கு மேற்படி ஐக் கிய தேசியக் கட்சியின் பிரமுகர் தமிழர் விடுதலைக் கூட்டணி பக்கம் பாய்ந்து, அதன் வேட்பாளராகக் களமிறங்கத் தயார் என்று ஒரு பேச்சு அடிபட்டது. அதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி இடம் அளிக் குமா என்று தெரியாத நிலைமை.

இந்தச் சமயத்தில் அந்த பிரமுகரின் மகனுக்குப் பக்கத்தில் நின்ற சில இளை ஞர்கள் அது குறித்து அமிர்தலிங்கத் திடம் கேட்குமாறு அந்த பிரமுகரின் மக னைத் தூண்டினர். அவர் பிற்காலத்தில் 'ஒருவாறு' சட்டத்தரணியானவர். அச்ச மயத்தில் சும்மா இருந்த இளைஞர்.

சக நண்பர்கள் தூண்டியமையால் அவர் எங்கள் பத்திரிகையாளர் குருநாத னிடம் ஒரு தாளையும் பேனாவையும் வாங்கி அந்தக் கேள்வியை எழுதி ஒரு பையன் மூலம் மேடைக்கு அனுப்பினார்.

"நேமிநாதன் இம்முறை தேர்தலில் போட்டியிட மாட்டார் எனத் தெரிகிறது. இதுவரை காலமும் ஐ.தே.கட்சியில் போட்டியிட்ட 'இன்ன' பிரமுகர் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பக்கம் வரத் தயாரானால் அவருக்கு இந்த முறை சீட் வழங்குவீர்களா?" என்ற சாரப்பட அந்தக் கேள்வி அமைந்திருந்தது.

அந்தக் கேள்வி மேடையில் வாசிக் கப்பட்டதும் சடார் என்று பதில் வந்தது அமிர்தலிங்கத்திடமிருந்து.

"செத்தவன் பொண்டாட்டியைக் கட்டி னாலும் விட்டவன் பொண்டாட்டியை கட்டக்கூடாது என்று சொல்லுவார்கள். இன்னொரு கட்சியை விட்டுக் குத்துக் கரணம் அடித்து வருபவருக்கு நாங்கள் இடம் கொடுக்க முடியாது" – என்று படார் எனப் பதில் தந்தார் அமிர்தலிங்கம். கை தட்டல்களும் விசில்களும் காதைப் பிளந் தன. எனக்குப் பக்கத்திலிருந்தும் ஒரு விசில் காதைக் கிழித்தது. யார் என்று திரும்பிப் பார்த்தேன். அந்த ஐ.தே.க. பிரமுகரின் மகன். தந்தை குறித்து கிண்டலாகப் பதில் தந்த அமிருக்கு தனது விசிலினால் பாராட்டுத் தந்து கொண்டி ருந்தார் அந்த இளைஞர்.

இப்படிப் பதிலளிப்பது அமிர்தலிங்கத் தின் பாணி.

ஐந்தாறு வருடங்கள் கழித்து 1982 ஜனாதிபதி தேர்தல் சமயம், பத்திரி கையாளராக இப்படி ஒரு கேள்வியை அமிர்தலிங்கத்திடம் கேட்டு, அவர் சிலே டைப் பழமொழியுடன் பதிலளித்த விடயம் எனக்கு இன்னமும் காதுக்குள் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

அந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடி யுரிமை பறிக்கப்பட்டமையால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஹெக்டர் கொப் பேகடுவ போட்டியிட்டார். இலங்கையின் சரித்திரத்தில் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் அது. ஐக்கிய தேசியக் கட்சி சார் பில் அதுவரை நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன களத்தில் இருந்தார்.

இந்தத் தேர்தலில் பங்கு கொள்வ தில்லை என்ற முடிவை தமிழர் விடுத லைக் கூட்டணி எடுத்திருந்தது. அந் தச் சமயத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்திடம் கொழும் பில் ஒரு செய்தியாளர் சந்திப்பின்போது நான் கேள்வி எழுப்பினேன்.

"இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு எதிரான உணர்வலைகள் தமிழர் பிரதேசத்தில் உச்சம் பெற்றிருக்கின்றன. அதனால் – தமிழர் தேசத்தில் சுதந்திரக் கட்சி வேட்பா ளர் ஹெக்டர் கொப்பேகடுவ அமோக வெற்றியீட்டும் சாத்தியங்கள் தென்படுவ தால் – மறைமுகமாக ஜே.ஆருக்கு ஆதரவு திரட்டி தருவதற்காகவே நீங்கள் இந்தத் தேர்தலில் பங்கு பற்றுவதில்லை, நடு நிலை வகிப்பது என்ற முடிவை எடுத் திருக்கிறீர்கள் எனக் கூறப்படுகிறது. அது உண்மையா?" – என்று நான் கேட்டேன்.

நான் கேள்வி கேட்டு முடிப்பதற்கு முன்னரே சீற்றத்துடன் பாய்ந்தார் அமிர் தலிங்கம்.

"அவர் என்ன சித்தப்பன், இவர் என்ன பெரியப்பனா? இருவருமே ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள். அத னால்தான் இருவரையும் நிராகரித்து, நாங்கள் தேர்தலில் பங்கு பற்றுவதில்லை என்ற முடிவை எடுத்தோம்" எனச் சூடாகப் பதிலளித்தார் அமிர்தலிங்கம்.

இப்படி சீற்றத்துடன் அதே நேரத் தில் சிலேடையான பழமொழிகளுடன் பதிலளிப்பது அமிர்தலிங்கத்தின் பண்பு என்பதை சொல்வதற்காக இந்த இரண்டா வது சம்பவத்தைக் குறிப்பிட்டேன்.

சரி. இனி விடயத்துக்கு வருகிறேன்.

பிள்ளையானைப் புகழும் உதய கம மன்பிலவின் கருத்துத் தொடர்பில் வெளி நாட்டில் இருக்கும் வயதில் மூத்த அந்த அன்பர் அமிர்தலிங்கம் பாணியில் எனக் குப் பதில் தந்தார்.

"விட்டவன் பொண்டாட்டியைக் கட்டக் கூடாது என்பார்கள். உவன் பிள்ளையான் விடுதலைப் புலிகளை விட்டு ஓடி வந்து காட்டிக் கொடுத்த ஆள். இப்போது அதே பாணியில் சிங்களத் தலைமைகளையும் காட்டிக் கொடுக்க பின்னிற்க மாட்டான். இது கம்மன்பிலக்கு புரியாமல் இருப்பது துரதிஷ்டம்" – என்றார் அவர்.

"புலிகள் இயக்கத்தில் சாதாரண போக் குவரத்துச் சேவையின் பஸ் சாரதியாக இருந்த பிள்ளையான், காட்டிக் கொடுத்துத் துரோகம் செய்ததால் முதலமைச்சராக வும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் நாட்டின் பிரதி அமைச்சராகவும் உயர முடிந்தது. நாளைக்கு சிறையில் இருந்து அடுத்த உயர் நிலைக்கு வருவதற் காக இதே கம்மன்பிலவைக் கூட காட்டிக் கொடுக்க பின்னிற்க மாட்டான்" என்றார் அந்த வயதில் மூத்த நண்பர்.

இது என் கருத்தல்ல. அவர் கருத்து. அதைக் கேட்டபோது என் இளமைக் காலத்தில் அமிர்தலிங்கம் மேடையில் இருந்து சூடாக அளித்த பதில் எனக்கு நினைவுக்கு வந்தது. அதனால் அதனை இன்று வாசகர்களோடு பகிர்ந்து கொண் டேன். அவ்வளவுதான்...!

---

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று வியாழக்கிழமை மன்னாரில் ஆற்றிய தேர்தல் பிரசார உரை முற்றும் முழுதாக தேர்தல் விதிமுறை மீறலா கும். ஒருவகையில் தேர்தலில் மக்க ளுக்கு இலஞ்சம் கொடுப்பது போன்ற ஓர் உரையை அங்கு அவர் நிகழ்த்தியி ருக்கின்றார்."

– இப்படி சீற்றத்துடன் கருத்து வெளி யிட்டிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்தி ரன்.

மன்னார் நகர சபைக்குத் தமது தேசிய மக்கள் சக்தியினரை மக்கள் தெரிவு செய்தால், அந்த நிர்வாகத்தின் திட்டங்களுக்கு கண்ணை மூடிக்கொண்டு நாம் அங்கீகாரம் வழங்கி நிதி ஒதுக்கீடு செய்வோம். வேறு தரப்பிடம் நிர்வாகம் போனால் அவர்களின் திட்டங்கள் குறித்து ஒன்றுக்குப் பத்துத் தடவை பரிசீலித்தே முடிவெடுப்போம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அங்கு உரையாற்றி இருக்கின்றார் எனச் சுமந்திரன் சுட்டிக் காட்டுகின்றார்.

"இந்த உரை அப்பட்டமாக தேர்தல் விதிமுறை மீறலாகும். இது தொடர் பில் நாம் தேர்தல் ஆணையத்திடம் உத்தி யோகபூர்வமாக முறையிட இருக்கின் றோம்.

மக்களுக்கு இலஞ்சம் கொடுத்து வாக்குத் திரட்டும் சமயோசித பாணியே இந்த உரை. இதற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோருவோம்."– என்று சுமந்திரன் கூறியிருக்கின் றார்.




# எச்சரிக்கை மட்டத்துக்கு வெப்பநிலை அதிகரிப்பு

## யாழ். மக்கள் அவதானம்

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மனித உடலால் உணரக்கூடிய வெப்பநிலையானது தற்போதைய நாள்களில் எச்சரிக்கை மட்டத்துக்கு அதிகரித்து வருகின்றமையால் அவதானமாக இருக்குமாறு யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது, இதனைத் தெரிவித்தார்.

வெப்பத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்பிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்குமாறு சூரிய ராஜா அறிவுறுத்தியுள்ளார்.

அதேநேரம், யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று வெப்பநிலையானது 34.2 பாகை செல்சியஸ்ஸாக பதிவாகியிருந்ததாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## வடக்கிலும் கடத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வியலாளர்களைக் கொலை செய்தவர்கள் இருக்கின்றார்கள். மக்களின் காணிகளை அபகரித்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு எதிராகவும் வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்."

– இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் நேற்று மாலை நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

"கடந்த காலங்களில் இலஞ்ச, ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராகச் சட்டம் செயற்படும். அவர்களின் முகவரி மகசின் சிறைச்சாலை என்று மாறுவது உறுதியாகும்.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர்களும் கம்பி எண்ணி வருகின்றார்கள்.

அதேபோல் படுகொலைகளில் ஈடுபட்டவர்கள், ஆட்கடத்தல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகவும் சட்டம் செயற்படும்.

நாம் இவ்வாறு செயற்படும்போது தேசிய மக்கள் சக்தி அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுவதாகக் கொக்கரிக்கின்றனர். எமக்கு எவருடனும் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. குற்றமிழைத்தவர்களுக்கு மன்னிப்பும் கிடையாது. சட்டத்தை நாம் கையில் எடுக்கமாட்டோம். நீதிமன்றம் ஊடாகவே அதற்குரிய பணி இடம்பெறும்.

மக்களின் நிம்மதியைச் சீர்குலைத்தவர்கள், தற்போது நடுங்க ஆரம்பித்துள்ளனர். சந்திரசேகர் ரௌடி எனவும் கூறத் தொடங்கியுள்ளனர். என்னை ரௌடி என அழைப்பது மகிழ்ச்சி. மக்களுக்காகச் செயற்படுகின்றபோது, மக்களுக்காகக் குரல் கொடுக்கின்றபோது, மக்களுக்காக எம்மை அர்ப்பணிக்கின்றபோது அதைப் பார்த்து ரௌடித்தனம் என்கின்றனர்.

இதுதான் ரௌடித்தனம் எனில் அதனை ஏற்றுக்கொள்ள நான் தயார். கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவின் பைல்களைத் தூக்கித் திரிந்தவர்கள்தான் இப்படிச் சொல்கின்றனர்.

புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டபோது அதனை வரவேற்றவர்கள், இன்றைக்கு தாங்கள்தான் புலிகள் அமைப்பின் அர்ப்பணிப்பு மிக்க தலைவர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர். புலிகள் காலத்தில் துரோகி முத்திரை குத்தப்பட்டவர்கள் இவர்கள்." – என்றார்.

## திஸ்ஸ விகாரைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"இனிமேலும் இந்த நாட்டில் இனவாதத்துக்கு இடமில்லை. இங்கு மக்கள் இனவாதத்தை விரும்பவில்லை. அரசியல்வாதிகளுக்கே இனவாதம் தேவைப்படுகின்றது.

திஸ்ஸ விகாரையை மையமாகக் கொண்டு பிரச்சினை ஒன்று காணப்படுகின்றது. திஸ்ஸ விகாரைப் பிரச்சினையை இலகுவாக முடிவுக்குக் கொண்டு வர முடியும். இந்தப் பிரச்சினையில் தலையிடும் வடக்கு அரசியல்வாதிகள் விலக வேண்டும். இதை வைத்து தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படும் இனவாத அரசியல் நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறு அரசியலை நீக்கினால் இந்தப் பிரச்சினைக்கு இலகுவாகத் தீர்வு காண முடியும்.

திஸ்ஸ விகாரையில் இருக்கும் பிக்குமார்கள், மதத் தலைவர்கள், காணி உரிமையாளர்கள் இணைந்தே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியும். ஆனால், சிலர் இனவாத அரசியலுக்காக இதனைத் தடுக்கின்றனர். மக்களின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் தேசிய மக்கள் சக்தி அரசு ஒருபோதும் செயற்படாது.

இந்த நாட்டில் எந்தவொரு தொல்லியல் சான்றுகள் கிடைக்கப்பெற்றால் அதனைச் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது. தொல்லியல் சான்றுகள் எங்கள் நாட்டின் வரலாற்று மரபுரிமையாகவே பார்ப்போம். இனவாதிகள் இவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம்.

இனவாதத்தைக் கையிலெடுத்து இந்த நாட்டில் முரண்பாடுகளை ஏற்படுத்தச் சிலர் முயற்சிக்கின்றார்கள். நாட்டில் எந்த விதத்திலும் இனவாதம் தலைதூக்க அனுமதிக்கமாட்டோம். இனவாதத்தைத் தோற்கடிக்க அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஜனாதிபதியின் லஞ்சம்

ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி வாகை சூடிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, நடைபெறும் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் கணிசமான வெற்றிகளை ஈட்டிக் காட்ட வேண்டிய இக்கட்டில் - அரசியல் கட்டாயத்தில் - இருக்கின்றது.

ஆனாலும், முன்னைய இரு தேர்தல்களின் போதும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பது உட்பட பல்வேறு விடயங்களில் அரசுக்கு எதிரான அதிருப்தி மக்கள் மத்தியில் தீவிரமடைந்திருப்பதாகச் செய்திகள், தகவல்கள் வெளியாகி உள்ள பின்னணியில், இந்த உள்ளூராட்சித் தேர்தலை எப்படியேனும் வெல்ல வேண்டும் என்பதற்காகப் பல்வேறு சாணக்கிய தந்திரோபாயங்களை முன்னெடுப்பதில் தீவிரமாக இருக்கின்றது ஆளும் தரப்பு.

செல்லுமிடம் எல்லாம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஆற்றி வரும் பிரசார உரைகள் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி வருகின்றன.

எப்படியும் வெல்ல வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக மக்களுக்கு லஞ்சம் கொடுக்கும் விதத்தில் அவர் உரையாற்றுகின்றார் என்று ஜனாதிபதி சட்டத்தரணியும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் வெளிப்படையாகக் குற்றம் சாட்டி இருக்கின்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தங்களுடைய தேசிய மக்கள் சக்தி தரப்பை வெற்றி பெற வைத்தால் மட்டுமே, அந்தக் கட்சி ஆட்சி நிர்வாகத்தை அமைக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கு தமது மத்திய அரசு கண்ணை மூடிக் கொண்டு அபிவிருத்தித் திட்ட நிதியை வாரி வழங்கும் என்றும், ஏனைய தரப்புகளுக்கு அதிகாரத்தை அளிக்கும் சபைகளுக்கு நிதியை வழங்குவதற்கு முன் ஒன்றுக்குப் பத்துத் தடவை பரிசீலிக்கும் கட்டுப்பாடு காட்டப்படும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பகிரங்கமாகப் பேசி வருகிறார்.

இது தேர்தல் விதிமுறை மீறல் என்று பல தரப்பினரும் சுட்டிக்காட்டி வருகின்றனர். ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மட்டுமல்லாமல், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவில் தொடங்கி தென்னிலங்கை எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் பலரும் இதனைச் சுட்டிக்காட்டி உள்ளனர். தமிழர் தரப்பில் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சத்தியலிங்கம் முதல் கொண்டு, வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் வரையில் பலரும் இதை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

மத்தியில் ஆளும் கட்சியின் ஆளுகைக்குள் இருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மட்டுமே மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க முடியும் எனவும். தான் நிதி ஒதுக்க முடியும் எனவும், தேர்தல் மேடைகளில் ஜனாதிபதி பேசுகின்றமை அவர் அதிகாரப் பகிர்வையும் ஜனநாயக ரீதியில் உள்ளூராட்சி தத்துவத்தையும் அப்பட்டமாக மீறுகின்ற நடவடிக்கை என்று தியாகராஜா நிரோஷ் சுட்டிக்காட்டி இருக்கின்றமையும் அவதானிக்கத்தக்கது.

போதையில் உளறுகின்ற தெருச் சண்டியர்கள் போல ஆளும் தரப்பினர் விலாசம் காட்டக் கூடாது என அவர் சுட்டிக் காட்டுவது மிகச் சரியான உதாரணம்தான்.

இலங்கையில் தேர்தல் ஆணையம் சுதந்திரமான - தற்றுணிவு கொண்ட - நிறுவனம் எனக் கூறப்பட்டாலும், அதன் அண்மைக்கால செயற்பாடுகள், அதன் தற்றுணிவையும், அதன் தனித்துவத்தையும் - மொத்தத்தில் அதன் தைரியத்தையும் - கேள்விக்கு உள்ளாக்கி இருக்கும் சூழலில், ஜனாதிபதியின் இது போன்ற மோசமான உரைகள் குறித்து அது நடவடிக்கை எடுக்கும் என்று நம்புவது துர்லபமே.






# வவுணதீவில் 'கோபு வாள் வெட்டுக் குழு' அட்டகாசம் பெண் ஒருவர் உட்பட இரண்டு பேருக்குப் படுகாயம்!

## மடக்கிப் பிடித்துக் கட்டி வைத்த சிறைச்சாலை உத்தியோகத்தர் தப்பினார்

(கனகராசா சரவணன்)

வவுணதீவு கொத்தியாவல பிரதேசத்தில் மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட கோபு வாள் வெட்டுக் குழுவினர் வீடு ஒன்றில் உள் நுழைந்து தக்குதல் நடத்தி அட்டகாசம் புரிந்ததில் பெண் ஒருவர் உட்பட இருவர் படுகாயமடைந்ததனர். தாக்குதலை மேற்கொண்ட குழுவைச் சேர்ந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரை வீட்டுக்காரரர்கள் மடக்கிப் பிடித்து கைகளைக் கட்டி வைத்தனர். ஆனால் தாக்குதலை மேற்கொண்டவர்கள் அவரை மீட்டுக் கொண்டு மோட்டர் சைக்கிள்களை விட்டு விட்டுத் தப்பி ஓடிய சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11.00 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

இது பற்றி தெரியவருவதாவது:-

மத்திய கிழக்கு நாடு ஒன்றில் சட்ட விரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வரும் ஒருவர் அந்தப் பணத்தை வைத்து வவுணதீவு பிரதேசத்தில் "கோபு ரீம்" என்ற வாள்வெட்டுக் குழு ஒன்றை இயக்கி வருகின்றார் எனக் கூறப்படுகின்றது. அந்தக் குழு பணத்தைப் பெற்று அவர்கள் சொல்லுபவர்களை தாக்குவது போன்ற அடியாள்கள் வேலை மற்றும் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றது.


சம்பவதினமான செவ்வாய்க்கிழமை இரவு கொத்தியாவல பிரதேசத்திலுள்ள சது என்பவருடனான முன்விரோதம் காரணமாக அவர் மீது தாக்குதல் நடத்த கோபு வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த 6 பேர் 3 மோட்டர்சைக்கிளில் அவரின் வீட்டைத் தேடிச் சென்றிருக்கின்றனர். அவர் வீட்டுக்கு அருகிலுள்ள காணியில் மாடுகளைக் கட்டிக் கொண்டிருந்த போது அவர் மீது தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றனர். அவர் அங்கிருந்து தப்பி ஓடி அருகிலுள்ள அவனது மாமனார் வீட்டில் தஞ்சடைந்துள்ளார்.

இந்த நிலையில் வாள்வெட்டு குழுவினர் அங்கு சென்று, வீட்டினுள் புகுந்து, அங்கிருந்த பொருள்களை அடித்துச் சேதப்படுத்தித் தாக்குதலை மேற்கொண்டதில் சது மற்றும் அவரது மாமியார் படுகாயடைந்தனர். தாக்குதல் மேற்கொள்ளச் சென்ற சிறைச்சாலை உத்தியோகத்தர் எனக் கூறப்படும் ஒருவரை வீட்டில் உள்ளோர் மடக்கிப் பிடித்துக் கட்டிவைத்துப் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இந்த நிலையில் வாள் வெட்டுக் குழுவினர் கட்டிவைத்த சிறைச்சாலை உத்தியோகத்தரை மீட்டு கொண்டு மோட்டார் சைக்கிள்களை அங்கு விட்டுவிட்டுத் தப்பி ஓடினர். அதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் 3 மோட்டார் சைக்கிள்களையும் மீட்டுக் கொண்டு சென்றமையுடன் தாக்குதலில் காயமடைந்தவர்களை மட்டு. போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். தாக்குதலை மேற்கொண்டவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையைத் தாங்கள் முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளைஇந்த வாள்வெட்டு குழுவினர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கசிப்பு உற்பத்தி செய்பவர்கள் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கியவர் எனக் கூறப்படும் ஒருவரின் வீட்டுக்கு வாள்களுடன் சென்று அவர் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, நீதிமன்ற பிணையில் அண்மையில் வெளிவந்துள்ளனர் எனவும் கூறப்பட்டது. இவர்கள் தொடர்ந்து இந்தப் பிரதேசத்தில் செய்துவரும் அட்டூழியங்களையடுத்து மக்கள் பயப் பீதியில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.








# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அடிப்படையாகக் கொண்டு பல வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றார். தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 6 ஆண்டுகள் நிறைவடையவுள்ளன. அவ்வாறெனில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது?"

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வியெழுப்பினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"உள்ளூராட்சிமன்ற தேர்தல் பிரசாரத்துக்காக தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் எவரும் கிராமங்களுக்குச் செல்லவில்லை. மாறாக அவர்களுக்கு பதிலாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பிரசாரங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார். ஆனால் நாம் அவ்வாறல்ல. மக்களுடன் இருப்பவர்களை வேட்பாளர்களாகக் களமிறக்கி அவர்களுடன் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் எமது ஆட்சி காலத்தில் இடம்பெற்ற போதிலும், அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை வழங்குமாறு நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அடிப்படையாகக் கொண்டே ஆட்சியமைத்தார்.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் இதனை அடிப்படையாகக் கொண்டு பல வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றார். பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கூட அவற்றை நம்பினார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்காகவே பிள்ளையான் கைது செய்யப்பட்டதாக நாம் எண்ணினோம். ஆனால் அவர் அதற்காக கைது செய்யப்படவில்லை.

இன்னும் ஓரிரு தினங்களில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 6 ஆண்டுகள் நிறைவடையவுள்ளன. அவ்வாறெனில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளுக்கு என்னநடந்தது? வாய் வார்த்தைகளால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க முடியாது. எனவே அதனை நடைமுறையில் செயற்படுத்த வேண்டும்.

ஜே.வி.பி. மிகச் சிறிய கட்சியாக இருந்த போதிலும், ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாட்டில் வன்முறைகளைத் தூண்டி ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்தியது. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி அவ்வாறானதல்ல. அது பொறுப்புள்ள எதிர்க்கட்சியாகும்."– என்றார்.

# சுகாதார உத்தியோகத்தர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தத் திட்டம்

சுகாதார உத்தியோகத்தர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக, சுகாதார அமைச்சில் நிறுவப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

உடற்பயிற்சி தொடர்பான டிப்ளோமாதாரி ஆலோசகர் ஒருவரின் கீழ், வாரத்தில் 5 வேலை நாட்களிலும் இந்த உடற்பயிற்சி கூடத்தைச் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# நண்பர்களுடன் குளத்தில் நீராடிய 23 வயது இளைஞர் பரிதாபச் சாவு!

(எஸ். ரகுதீஸ்)

யாழ். தென்மராட்சி, வரணி – சிட்டிவேரம் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் நீராடிய இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம், தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த சிவராசு சிலுசன் (வயது 23) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை நண்பர்களுடன் சிட்டிவேரம் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் நீராடியபோது மேற்படி இளைஞர் தாமரைக் கொடியில் சிக்குண்ட நிலையில் மீட்கப்பட்டு வரணி பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

சடலம் மரண விசாரணைக்காகவும், பிரேத பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



# முத்தையன்கட்டில் மனித நுகர்விற்கு ஒவ்வாத உணவு பொருள்கள்: வெதுப்பகத்துக்கு பூட்டு

(பா.சதீசன்)

முத்துஐயன்கட்டு பகுதியில் இயங்கி வரும் வெதுப்பகம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையில் மனித நுகர்விற்கு ஒவ்வாத 25 கிலோவிற்கு மேற்பட்ட உற்பத்தி பொருள்கள் அழிப்பு செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முத்துஐயன் கட்டு பகுதியில் இயங்கி வரும் வெதுப்பகம் ஒன்றிற்கு ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரியின் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் திடீர் பரிசோதனை ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதன்போது மனித நுகர்விற்கு பொருத்தமற்ற 25 கிலோகிராமிற்கு மேற்பட்ட வெதுப்பக உற்பத்தி பொருள்கள் கைப்பற்றப்பட்டு உடனடியாக அழிப்பு செய்யப்பட்டிருந்தது.

இந்த வெதுப்பகம் சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வருவதனால் குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை மூடப்பட்டுள்ளதுடன், 10 நாள்களில் சுகாதார குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும் எனவும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாது இருப்பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொதுச்சுகாதார பரிசோதகரினால் வெதுப்பக உரிமையாளருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.











# நாட்டின் பல பகுதிகளில் இன்று மழை பெய்யக்கூடும்



நாட்டின் பல பகுதிகளில் இன்று மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி, மேல், சப்ரகமுவ, மத்திய, தென், கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மேலும் சில பகுதிகளில் 50 மில்லி மீற்றர் அளவிலான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.



# தெற்குக் கட்சிகளை நிராகரிக்கும் அதேசமயத்தில் எதற்கு வாக்களிப்பது என்பதிலும் நிதானம் தேவை

## ஐங்கரநேசன் மக்களுக்கு வேண்டுகோள்



தமிழ்க் கட்சிகள் எல்லாமே உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுவருகின்றன. ஜே.வி.பியை மாத்திரம் அல்ல, தென்னிலங்கைக் கட்சிகள் எதையுமே நாம் ஆதரிக்க முடியாது. தென்னிலங்கைக் கட்சிகளை நிராகரிக்கும் அதேசமயம் எதற்கு வாக்களிக்க வேண்டும் என்பதிலும் எமக்கு நிதானம் தேவை. தமிழ்த் தேசிய அரசியலை வியாபாரப் பண்டமாக்கி, மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் தமிழ் அரசியற் கட்சிகளையும் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலி.வடக்கு பிரதேசசபைக்கு சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைக்கும் கூட்டம் நேற்று முன்தினம் மல்லாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

ஜனாதிபதித் தேர்தலின்போதும் நாடாளுமன்றத் தேர்தலின்போதும் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களில் கணிசமானோர் ஜே.வி.பி. என்னும் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கிறார்கள். தமிழ்த் தேசிய அரசியற் பயணத்தில் ஒரு பின்னடைவாக வடக்கு, கிழக்கில் ஜே.வி.பி காலூன்றியமைக்கு எமது வாக்காளர்களைக் குற்றம் சாட்டுவது எவ்விதத்திலும் ஏற்புடையது அல்ல. எங்கள் கைவிரல்களாலேயே எங்கள் கண்களைக் குத்துவது போன்று தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளே தென்னிலங்கைப் பேரினவாதக் கட்சிகளுக்குத் தமிழ் மக்களை வாக்களிக்கப் பழக்கினார்கள்.

முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறுத்தப்பட்டவுடன் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் வரலாற்றுப் பிழையான முடிவை எடுத்தார். முள்ளிவாய்க்கால் வரை யுத்தத்தை முன்னின்று நடாத்திய சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்களை அவர் வாக்களிக்க வைத்தார். இதன் மூலம் போர்க்குற்றவாளி என்ற குற்றச்சாட்டிலிருந்து நாமே அவரை விடுதலை செய்தோம். இதன் விளைவாகவே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எப்போதுமே எதிரான நிலைப்பாடுகளை எடுத்து வந்த ஜே.வி.பிக்கு இன்று தமிழ் மக்கள் வாக்களிக்கத் தலைப்பட்டுள்ளார்கள்.

எம் மத்தியிலுள்ள பல தமிழ்க் கட்சிகள் உதட்டளவில் தமிழ்த் தேசியம் பேசுவனவாகவும் மனதளவில் பேரினவாதக் கட்சிகளை விசுவாசிப்பனவாகவுமே உள்ளன. மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்களை இலஞ்சமாகப் பெற்றும், பன்னாட்டு நிறுவனங்களிடம் பல கோடிகளைப் பெற்றும், மத்திய அரசின் பாதீடுகளை ஆதரித்தும் தமிழ்த் தேசிய விரோத நிலைப்பாடுகளை எடுப்பதற்கு இக்கட்சிகள் ஒருபோதும் தயங்கியதில்லை. தமிழ் மக்கள் இத்தேர்தலில் தென்னிலங்கைக் கட்சிகளோடு இப்போலித் தமிழ்த்தேசியக் கட்சிகளையும் சேர்த்தே நிராகரிக்க வேண்டும். – என்றும் தெரிவித்துள்ளார்.



## அஹுங்கல்லயில் துப்பாக்கிச்சூடு

### ஒருவர் காயம்

அஹுங்கல்ல பகுதியில் நேற்று மாலை துப்பாக்கிச் சூடு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த நபர் 28 வயதுடையவர் என்று கூறப்படுகிறது.


இணுவில் கலை இலக்கிய வட்டமும்
அறிவாலயமும் இணைந்து நடாத்தும்
கவிஞர். நாக.சிவசிதம்பரம் எழுதிய
“வேரினை நோக்கிய விழுதுகள்” (கவிதை)
**நூல் வெளியீட்டு விழா**

காலம் : 18.04.2025 (வெள்ளிக்கிழமை)
மாலை 3.30 மணி
இடம் : இணுவில் அறிவாலயம்

**தலைமை**
வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன்
தலைவர், அறிவாலயம்.

**நிகழ்வுகள்**
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம் - திரு.அ.சண்முகப்பிரியன்
- வரவேற்புரை - திரு.ச.வாகீசன் (இணுவில் தமிழ்ச்சங்கம்)
- ஆசியுரை - செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
- வாழ்த்துரை - கவிஞர் திரு.சோ.பத்மநாதன்
- தலைமையுரை
- தொடக்கவுரை - கவிஞர் திரு.த.ஜெயசீலன், பிரதேச செயலர், பச்சிலைப்பள்ளி.
- நூல் வெளியீட்டுரை - பேராசிரியர்.கந்தையா ஸ்ரீகணேசன், தலைவர், இணுவில் கலை இலக்கிய வட்டம்.
- நூல் வெளியீடு
- நூல் மதிப்புரைகள் - பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், யாழ் பல்கலைக்கழகம். திரு.ம.பா.மகாலிங்கசிவம், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்.
- ஏற்புரை - நூல் ஆசிரியர்
- நன்றியுரை - திரு.ந.ஞானசூரியர், செயலாளர், இணுவில் கலை இலக்கிய வட்டம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## உள்ளூராட்சி சபை
# தேர்தல் களம்

# நாட்டில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நோக்கிலான சதித்திட்டம்தான் பிள்ளையான்' - உதய கம்மன்பில சந்திப்பு

### நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு விவரிப்பு



**(கனகராசா சரவணன்)**

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான்ச் உதய கம்மன்பில பிள்ளையானுடன் சேர்ந்து இந்த நாட்டில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதுடன் இருவரது செயற்பாடுகளின் பின்னால் பெரிய ஒரு சதிதிட்டம் இருப்பதாக கருதுகின்றோம் என தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

திசைகாட்டி சின்னத்தில் மட்டக்களப்பு மாநகரசபை தேர்தலில் புளியந்தீவு வட்டாரத்தில் போட்டியிடும் முத்துலிங்கம் துதீஸ்வரன் மற்றும் நித்தியானந்தன் நிருஷ்னி ஆகியோரின் தேர்தல் காரியாலயத் திறப்பு விழா நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது அங்கு உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சரான பிள்ளையான் என்றழைக்கப்படும் சி.சந்திரகாந்தனின் சட்டத்தரணியாக உதய கம்மன்பிலசெயற்படுகின்றார். இவர்பிள்ளையானை நேரடியாகச் சென்று சந்தித்தமை தொடர்பாக ஊடகங்களில் தெரிவித்துள்ளார்.



இந்த இருவருக்கும் இடையிலான உறவு என்பது கடந்த காலங்களில் உதய கம்மன்பில போன்றவர்கள் இனவாத ரீதியாக இந்த நாட்டை குழப்பும் செயற்பாடுகளை முன்னின்று செயற்பட்டவர்களின் முக்கியமாக கருதப்படுபவர். அவர் இன்று பிள்ளையானுடன் இணைந்து அவரது சட்டத்தரணியாக செயற்பட வந்திருப்பது என்பது ஒரு பெரிய சதித்திட்டத்தின் ஆரம்பப் புள்ளியாகக் கருதுகின்றோம்.

இவர்கள் இருவருக்கும் இடையிலான உறவானது இந்த நாட்டில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்ற சந்தேகம் எங்கள் மத்தியில் எழுகின்றதுடன் இனிவரும் காலங்களில் இவர்கள் தொடர்பான பல தகவல்கள் வெளியிடப்படும். அதே வேளை இவர்கள் இருவரது செயற்பாடுகளின் பின்னால் பெரிய ஒரு சதித்திட்டம் இருப்பதாக கருதுகின்றோம். அதேவேளை மக்கள் இவர்களை அவதானித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களால் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில ஊழல்கள், கொலைக் குற்றச்சாட்டுக்கள் போன்ற விடயங்கள் காரணமாக சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான விசாரணைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றையொட்டிய கைதுகளே இன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே எந்த ஓர் அரசியல் நோக்கத்துக்காகவும் இவர்களை கைது செய்யப்படவில்லை. இவர்கள் கடந்த காலங்களில் வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர். அதனை நிறைவேற்றவில்லை என நாடாளுமன்றத்தில் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். இன்று அவர்களது குற்றச்சாட்டுக்கள், ஊழல்கள் வெளிவந்த பின்னர் மீண்டும் அழுகுரலை காணக் கூடியதாக இருக்கின்றது. அரசாங்கம் தங்களை அரசியல் பழிவாங்கல் செய்வதாக அலறிக் கொண்டிருக்கின்றனர். இது ஒரு சட்டரீதியான நடவடிக்கை. இது தொடர்பான தகவல்கள் வெளிவரும். – என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மைகளை ஓரிரு தினங்களுக்குள் வெளிப்படுத்த வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வலியுறுத்து

(ஏ.எச்.ஹஸ்பர்)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மைகளை ஓரிரு தினங்களுக்குள் வெளிப்படுத்த வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகக் காணப்படுகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

திருகோணமலை நிலாவெளி பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் –

தேர்தல் காலத்தில் அரசாங்கம் சொன்னதை போன்று செயற்பட வேண்டும். அநியாயமாக கைதானவர்களை விடுவிக்கப்பட்டு சரியான விமோசனம் கிடைக்க வேண்டும் என நாங்கள் நம்புகின்றோம்.



குச்சவெளி பிரதேசத்தில் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாக்களித்தால் மக்கள் காங்கிரஸின் ஊடாக அதிகளவான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என நம்புகிறோம். தமிழ் – முஸ்லிம் மக்களின் ஒற்றுமை ஊடாக பிரதேச சபை ஆட்சியை அமைக்கலாம். – என்றார்.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE

### மத்தியின் கட்சி வசம் இருந்தாலேயே உள்ளூராட்சி சபைக்கு நிதி ஒதுக்கப்படுமா?

# அதிகாரப் பகிர்வும், உள்ளூராட்சி முறைமைத் தத்துவமும் ஜனாதிபதியின் பொய்யுரையினால் கேலிக்குள்ளாகின்றன

## போதையில் பிதற்றும் தெருச் சண்டியர்கள் போல பேசக் கூடாது என்கிறார் நிரோஷ்

உள்ளூராட்சி மன்றங்கள் மத்தியில் ஆளும் கட்சியின் ஆளுகைக்குள் உள்ளூராட்சி மன்றங்கள் இருந்தால் மட்டுமே மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் எனவும், தாம் நிதி ஒதுக்க முடியும் எனவும், தேர்தல் மேடைகளில் ஜனாதிபதி பேசுவதனால் அவர் அதிகாரப் பகிர்வையும் ஜனநாயக ரீதியில் உள்ளூராட்சி தத்துவத்தையும் மீறுகின்றார் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிதி விடயத்தில் அந்தந்த சபைகளின் தலைவர்களுக்கே அதிகாரம் காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்கள் மத்தியில் தங்கி வாழும் நிறுவனங்கள் அல்ல. உள்ளூராட்சி என்பது ஆட்சி முறைமை. அது வரிகளையும் வருமானங்களையும் திரட்டுவதற்கும் தீர்மானிப்பதற்கும் செலவிடுவதற்கும் அதிகாரம் பொருந்திய சட்ட ரீதியான ஆட்சி அலகாகும்.

உள்ளூராட்சி மன்றங்கள் உலகளவில் வரலாற்று ரீதியில் உருவாக்கப்பட்ட ஆட்சி முறை என்ற அடிப்படையில் மத்திய அரசாங்கத்திடம் இருந்து அதிகாரப்பகிர்வைப் பெற்றுள்ளன. ஜனநாயக மற்றும் சட்ட ரீதியிலான அந்தஸ்தாக உள்ளூராட்சி மன்றங்கள் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. இலங்கையிலும் அரசமைப்புச் சட்ட சரத்துக்களின் ரீதியில் உருவாக்கப்பட்ட சட்டங்களினால் அதிகாரத்தை அவை பெற்றுள்ளன. சட்டரீதியில் உள்ளூராட்சி மன்றங்கள் சோலைவரி மாற்றம் ஆதனப் பெயர் மாற்றங்களின் போதான முத்திரைத் தீர்வை, நீதிமன்றக் குற்றப்பணம், சேவைகளுக்கான அறவீடுகள், தண்டப்பணங்கள் என பல மில்லியன் ரூபாக்களுக்கு உரித்தாளர்களாகவுள்ளன. வசதிக்குறைவான உள்ளூராட்சி மன்றங்களும் காணப்படுகின்றபோதும் அவ்வாறாக வசதிக்குறைவுக்கு மத்திய அரசின் எடுபிடியாக அல்லது ஆதிக்கத்தினுள் உள்ளூராட்சி மன்றங்கள் இருப்பது தீர்வல்ல.




மத்திய அரசாங்கம் சர்வதேசத்திடம் பெறும் அதிக உதிவிகள் மக்களின் நலன்புரி விடயங்களை மையமாகக் கொண்டுள்ளன. அந்நிதி உதவிக்கான முன்மொழிவுகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட சேவைப் பரப்புக்களாகக் காணப்படுகின்றன. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பல்வேறுபட்ட சர்வதேச தாபனங்களிடமும் நாடுகளிடமும் இருந்து மத்திய அரசாங்கம் மானியங்களைப் பெறுகின்றது. அந்த உதவிக் கோரிக்கையில் உள்ளூராட்சி மன்றங்கள் செய்ய வேண்டிய சேவைப்பரப்புக்களை காரணங்காட்டியே உதவிகள் பெறுகின்றன. அவ்வாறு அரசாங்கம் பெறும் உதவிகளை ஜனாதிபதி தனது கட்சிக்காரரின் சபைக்கு மட்டும்தான் கொடுப்பேன் எனக் கூற முடியாது. அவ்வாறு ஜனாதிபதி செய்தால் உதவிகளை சர்வதேசம் வழங்காது. அப்படி அரசாங்கம் செயற்பட்டால் இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச கொடையாளர்களின் கவனத்திற்கு நாம் கொண்டு செல்ல முடியும். அதனால் நாட்டிற்கான சர்வதேச உதவிகளே தடைப்பட்டுவிடும். சர்வதேச உதவி தடைப்பட்டால் அது மத்திய அரசாங்கத்தின் இருப்புக்கே ஆபத்தாக மாறிவிடும். வெளிநாட்டு உதவிகளை ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சபைகளுக்கு தேவை முன்னுரிமை அடிப்படையில் அரசாங்கம் பகிர்ந்தே ஆக வேண்டும்.

உள்ளூராட்சிமன்றங்களின்ஆளணியினருக்கான சம்பள விடயங்கள் மத்திய அரசு சார்ந்திருந்த போதும் அவற்றிற்கான மானிய உதவியை இன்றைய ஜனாதிபதி நினைத்தால் மாத்திரம் நிறுத்திவிட முடியாது. உத்தியோகத்தர்களின் நியமனம் மற்றும் சேவை அடிப்படையில் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு சட்டப் பாதுகாப்பும் தொழில் உரிமையும் உள்ளன. ஆகவே அரசாங்கம் போதையில் பேசுகின்ற தெருச் சண்டியர்கள் போல விலாசம் எழுப்பக் கூடாது. - என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் மட்டுமே முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும்

### நீர்கொழும்பில் ஹிஸ்புல்லாஹ் எம்.பி. தெரிவிப்பு

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு மாநகர சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் பொதுக்கூட்டம் நீர்கொழும்பு போருத்தொட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்து சிறப்பித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் –

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் மாத்திரம்தான் முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

நீர்கொழும்பு மாநகர சபையில் முஸ்லிம் காங்கிரஸினால் மாத்திரம்தான் ஏழு முஸ்லிம் உறுப்பினர்களைப் பெற முடியும். வட்டாரங்களை வென்றாலும் தோற்றாலும் பட்டியலிலாவது முஸ்லிம் உறுப்பினரைப்பெற சந்தர்ப்பம் கிடைக்கும். வேறெந்தக் கட்சிக்கு வாக்களித்தாலும் முஸ்லிம் உறுப்புரிமையைப் பெற முடியாதென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.



குறுகிய காலத்தில் எமது நாட்டில் முஸ்லிம் சமூகம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கிறது. தற்போதுள்ள நிலைமையில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

கட்சி எப்போதும் உங்களுக்கு ஒத்துழைப்பாகவும் உறுதுணையாகவும் இருக்கும். நீர்கொழும்பு மாநகர சபையைக் கைப்பற்றி, மாநகர அதிகாரத்தைப் பெறுகின்ற சமூகமாக முஸ்லிம் சமூகம் மாற வேண்டுமென்றால் முஸ்லிம் காங்கிரஸிற்கு வாக்களியுங்கள். உங்களுக்கான உரிய அதிகாரத்தைப் பெற்றுத்தருவோம்.

இதன் மூலம் மாநகர சபை, மாகாண சபை, நாடாளுமன்றம் என்று மூன்று கட்ட அதிகாரங்களையும் பெறலாம்.

இம்முறை சிந்திந்து வாக்களியுங்கள். மற்ற கட்சியினருக்கு வாக்களித்து நமது பிரதிநிதித்துவத்தை இல்லாமலாக்க துணை போக வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். – என அவர் தமது உரையில் தெரிவித்தார்.

இதன்போது, முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஷாபி றஹீம், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், மத்திய குழு உறுப்பினர்கள், நீர்கொழும்பு மாநகர சபை வேட்பாளர்கள், ஊர்ப்பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

## சம்மாந்துறையில் கட்சிகளுக்கிடையில் மோதல்; கைதான ஆறு பேர் சரீரப்பிணையில் விடுவிப்பு!

( வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறையில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது இரு கட்சிகளுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் சம்பந்தப்பட்ட 6 சந்தேக நபர்கள் பிணையில் செல்ல சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் ஏற்பட்ட மோதல் ஒன்றில் பலர் காயமடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வட்டார வேட்பாளர் உட்பட ஆறு பேர் சம்மாந்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 6 பேரும் கடந்த புதன்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது சந்தேக நபர்களை தலா ரூபா 50 ஆயிரம் சரீர பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

வழக்கு ஜூன் மாதம் முதலாம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. காயமடைந்து சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த தேசிய காங்கிரஸின் வீரமுனை வட்டார வேட்பாளர் ஏ.சி.எம்.சஹீலை தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவ தினத்தன்று முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வருகை தந்து சென்ற பின்னர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்களால் வீரமுனை வட்டார வேட்பாளர் ஏ.சி.எம்.சஹீல் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அம்பாறை மாவட்டத்தின் முதலாவது தேர்தல் வன்முறைச் சம்பவமாக இது குறிப்பிடப்பட்டுள்ளது.




# வாக்குச்சீட்டு அச்சிடும் பணியை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாக நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்ட 100 றக்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரச அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால் மூல வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டதாக அரச அச்சகமா அதிபர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்காளர் அட்டைகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை 17 மில்லியன் வாக்காளர்களுக்கும் 64 லட்சம் வீடுகளுக்கும் விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் 71 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெற உள்ளது.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்கெடுப்புக்கான திகதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் 24, 25, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் அஞ்சல் மூல வாக்கெடுப்பு இடம்பெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக 22 ஆம், 23 ஆம் திகதிகளில் அஞ்சல் வாக்கெடுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும், நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பான தீர்ப்பின் நிமித்தம், அந்தத் திகதிகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.







# நானாட்டான் சுற்றுவட்டத்துக்கு அருகில் வயரிங் பழுது பார்க்கும் கடை எரிந்து நாசம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானாட்டான் சுற்றுவட்டத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள வாகனங்களுக்கான வயரிங் பழுது பார்க்கும் கடை ஒன்றில் நேற்று வியாழக் கிழமை மாலை ஏற்பட்ட தீ பரவல் காரணமாக அந்தக் கடை முற்றாக எரிந்து சேதமாகியுள்ளது .

அந்த கடைக்கு உள்ளே நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களும் முற்றாக எரிந்துள்ளன எனத் தெரிய வருகிறது.

அருகில் உள்ள ஆலயத்தில் பெரிய வியாழன் வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் அங்கிருந்த இளைஞர்கள் ஓடி வந்து இந்தத் தீப்பரவலை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதிலும் கடை முற்றாக எரிந்து அதற்குள் உள்ள இயந்திரப் பொருத்களும் எரிந்து சாம்பலாகி உள்ளன.

கடையில் திடீர் மின் ஒழுக்கு காரணமாகவே தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.



# சகோதரர்களின் சண்டையில் தீக்கிரையானது மோ.சைக்கிள்

## இருவரும் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்

(மஸ்கெலியா நிருபர்)

சகோதரர் இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக 10 லட்சம் ரூபா பெருமதியான மோட்டார் சைக்கிள் தீக்கிரையானது.

இச்சம்பவம்நேற்றுமாலை6மணிக்கு ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை பகுதியில் உள்ள சுரங்கத்தை அன்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.



இது குறித்து திம்புள்ள பத்தனை பொலிஸார் கருத்து தெரிவிக்கையில் –

இரு சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட வாய் தர்க்கம் சண்டையில் முடிந்து இருவரும் படுகாயங்களுடன் கொட்டகலை பிரதேச வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றனர்.

சண்டையின் போது 10 லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் தீ வைக்கப்பட்டு எரிந்த நிலையில் பொலிஸெ மீட்டனர்.



# பஸ் சேவைகள் குறித்து 143 முறைப்பாடுகள்

சித்திரை புத்தாண்டு காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பஸ் சேவைகள் குறித்து இதுவரை 143 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதிக கட்டணங்கள் அறவிடப்பட்டமை, பயணிகளை தரம் குறைவாக நடத்தியமை, அதிக வேகம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை முன்வைத்தே அதிகமான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இந்த அனைத்து முறைப்பாடுகள் தொடர்பான விசாரணகளையும் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு பின்னர் ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

1955 எனும் துரித தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்து முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் பயணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தில் சொந்த இடங்களுக்கு சென்றவர்கள் மீண்டும் தலைநகர் கொழும்பிற்கு திரும்புவதற்காக எதிர்வரும் 21ஆம் திகதி வரை விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# தேயிலை சக்தி நிதியின் பங்குகள் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு

தேயிலை சக்தி நிதியின் பங்குகளை சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களுக்கு மீண்டும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் பங்குகளுக்கான பணத்தையும் வட்டியையும் பெற்றுக்கொள்ள முடியும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

தேயிலை சக்தி நிதியின் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாது எனும் நிலைப்பாட்டிலேயே தாம் உள்ளதாக அவர் கூறினார்.

இதனால் தேயிலை சக்தி நிதியின் பங்குகளை கொள்வனவு செய்து நிதியத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களுக்கு அவற்றை உரிய வட்டியுடன் மீண்டும் வழங்க தீர்மானித்ததாக தெரிவித்தார்

# த.வெ.க. கொடியில் யானைச் சின்னத்தைப் பயன்படுத்த தடை கோரிய வழக்கில் விஜய் பதிலளிக்க உத்தரவு

த.வெ.க. கட்சி கொடியில் இடம் பெற்றுள்ள யானை சின்னத்தை பயன்படுத்த தடை கோரிய வழக்கில் அக்கட்சியின் தலைவர் விஜய், பொதுச் செயலாளர் என். ஆனந்த் ஆகியோர் பதிலளிக்க சென்னை உரிமையியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில், பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக பொதுச் செயலாளர் பெரியார் அன்பன் என்ற இளங்கோவன், தாக்கல் செய்த மனுவில், “த.வெ.க. கட்சி கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்த தடை விதித்து உத்தரவிட வேண்டும்,” என்று கோரியிருந்தார். இந்த மனு சென்னை உரிமையியல் நீதிமன்ற நீதிபதி சக்திவேல் முன்பு விசாரணைக்கு வந்தது.



அப்போது பகுஜன் சமாஜ் கட்சி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பி.ஆனந்தன், “பகுஜன் சமாஜ் கட்சி தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட கட்சி. அந்தக் கட்சிக்கு யானை சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த சின்னத்தை, அசாம் தவிர மற்ற மாநிலங்களில் பகுஜன் சமாஜ் கட்சிக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. நடிகர் விஜய்யின் த.வெ.கவின் கட்சிக் கொடியில் யானைகள் இடம்பெற்றிருப்பது தேர்தல் சின்னங்கள் விதிகளுக்கு முரணானது.

ஏற்கெனவே. இது தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு புகார் அனுப்பிய போது, த.வெ.க. இன்னும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றும் பதிவு செய்யும் போது இது தொடர்பாக முடிவெடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியிருந்தது. எனவே யானை சின்னத்தைப் பயன்படுத்த தவெகவுக்கு தடை விதிக்க வேண்டும்” என்று வாதிட்டார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த மனுவுக்கு எதிர்வரும் ஏப்ரல் 29 ஆம் திகதிக்குள், த.வெ.க. தலைவர் விஜய் மற்றும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் என். ஆனந்த் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை ஒத்திவைத்தார்.

# விஜய் வெறும் அறிக்கை மட்டுமே வெளியிடுவது சரியல்ல; கஸ்தூரி

“த.வெ.க. தலைவர் விஜய் மக்களை சந்திக்க வேண்டும். வெறும் அறிக்கை மட்டுமே கொடுத்து வருவது சரியில்லை” என நடிகை கஸ்தூரி தெரிவித்துள்ளார்.

குமாரபாளையத்தில் உள்ள தனியார் கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் நடிகை கஸ்தூரி கலந்து கொண்டார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“அ.தி.மு.க, பா.ஜ.க, தே.மு.தி.க, த.வெ.க, நாம் தமிழர், அ.ம.மு.க. உள்ளிட்ட கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து கூட்டணி அமைக்க வேண்டும். கூட்டணி ஆட்சி இல்லை என்று எடப்பாடி பழனிசாமி சொன்னது சரி தான். தி.மு.க.வுக்கு சரியான எதிர்க்கட்சி அ.தி.மு.கதான். யாரை ஆட்சியில் அமர வைக்க வேண்டும். யாரை அமர வைக்கக்கூடாது என்பதில் மக்கள் தெளிவாக உள்ளனர்.



த.வெ.க. தலைவர் விஜய் மக்களை சந்திக்க வேண்டும். வெறும் அறிக்கை மட்டுமே கொடுத்து வருவது சரியில்லை. தி.மு.க. ஆட்சியில் பொது மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்வதில் பாரபட்சம் காட்டுகிறது என கூறுவது பொய். மத்திய அரசு செயல்படுத்தும் திட்டம் வெற்றி பெற்று விட்டால் தி.மு.கவினருக்கு பிடிக்காது. வட மாநிலங்களில் இருந்து பிழைப்பு தேடி, தமிழ்நாட்டுக்கு வருவதால் தமிழக ஆட்சி சிறப்பான ஆட்சி என்று சொல்ல முடியாது. அதுவும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இருந்து வருவதில்லை. காங்கிரஸ், கம்யூனிஸ்ட் ஆளும் மாநிலங்களில் இருந்து தான் வருகின்றனர்.” என்றார்.

# இந்தியா - ரஷ்யா இடையிலான சுற்றுலா போக்குவரத்து அதிகரிப்பு

இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையிலான பரஸ்பர சுற்றுலா போக்குவரத்துப் பரிமாற்றம் 2024ஆம் ஆண்டில் கணிசமாக அதிகரித்துள்ளது என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

2024 ஆம் ஆண்டு ரஷ்யாவுக்குப் பயணம் செய்த இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,20,000 ஐ கடந்துள்ளதாகவும், இது 2023 ஆம் ஆண்டு 60,000 சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடுகையில் இரட்டிப்பான வளர்ச்சியைக் காட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு சுமார் 1,60,000 ரஷ்யர்கள் இந்தியாவிற்குச் சுற்றுலாப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளின் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இந்த நிலைத் தொடர்ந்தால் 2025 ஆம் ஆண்டுக்குள் பரஸ்பர சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 4,50,000 ஐ எட்டலாம் என மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதனால் இந்தியாவிற்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வரும் முக்கியமான 10 நாடுகளின் பட்டியலில் ரஷ்யா இடம் பிடித்துள்ளது.

மேலும், ஈ-விசா செல்லுபடியாகும் காலத்தை நீட்டிக்கும் நோக்கத்துடன், விசா விதிமுறைகளை மேலும் தளர்த்த இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

அண்மையில் இந்தியா, விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்காக எளிமைப்படுத்தப்பட்ட சுற்றுலா நடைமுறையை அறிமுகப்படுத்தியதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இந்தியா - ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையிலான விமான சேவைகளின் விரிவாக்கம், பண்பாட்டுப் பரிமாற்றங்கள் பரஸ்பர சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# டொனால்ட் ட்ரம்பின் வெளிநாட்டு இறக்குமதிகள் மீதான வரிகளை எதிர்த்து கலிபோர்னியா ஆளுநர் வழக்குத் தாக்கல்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வெளிநாட்டு இறக்குமதிகள் மீதான பரந்த வரிகளை சட்டப்பூர்வமாக எதிர்த்து கலிபோர்னியா ஆளுநர் கவின் நியூசம் நிர்வாகம் வழக்கு தொடர்ந்துள்ளது.

இதன்படி, ட்ரம்பின் வரிகளுக்கு எதிராக போராடிய முதல் மாநிலமாக கலிபோர்னியா மாறியுள்ளதுடன், வரிகளை விதிப்பதில் ட்ரம்ப் தனது சட்டப்பூர்வ அதிகாரத்தை மீறியுள்ளார் என ஆளுநர் கவின் நியூசம் நிர்வாகம் வாதிடுகிறது.

சான் பிரான்சிஸ்கோவில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், ஆளுநர் நியூசம் மற்றும் அட்டர்னி ஜெனரல் ராப் போண்டா ஆகியோர், ட்ரம்பின் நடவடிக்கைகள் கலிபோர்னியாவிற்கும் பரந்த அமெரிக்க பொருளாதாரத்திற்கும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, காங்கிரஸின் ஒப்புதல் இல்லாமல் வரிகளை நடைமுறைப் படுத்துவதன் மூலம் ஜனாதிபதி தனது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

“ஜனாதிபதி ட்ரம்பின் சட்டவிரோத வரிகள் கலிபோர்னியா குடும்பங்கள், நிறுவனங்கள் மற்றும் நமது பொருளாதாரத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றன, விலைகளை உயர்த்தி வேலைகளை அச்சுறுத்துகின்றன” என்று நியூசம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கலிபோர்னியா உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாகும், ஒவ்வொரு அமெரிக்க மாநிலத்தையும் பெரும்பாலான நாடுகளையும் விஞ்சி, அமெரிக்காவில் உற்பத்தி மற்றும் விவசாய உற்பத்தியில் மிகப்பெரிய பங்குகளைக் கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், கலிபோர்னியா ஆளுநர் நியூசமினால் தொடரப்பட்ட மேற்கண்ட வழக்கிற்கு வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

“கலிபோர்னியாவின் பரவலான குற்றம், வீடற்ற தன்மை மற்றும் கட்டுப்படியாகாத தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, நமது நாட்டின் தொடர்ச்சியான பொருள்கள் வர்த்தக பற்றாக்குறையின் தேசிய அவசரநிலையை இறுதியாக நிவர்த்தி செய்வதற்கான ஜனாதிபதி ட்ரம்பின் வரலாற்று முயற்சிகளைத் தடுக்க கவின் நியூசம் தனது நேரத்தை செலவிடுகிறார்,” என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் குஷ் தேசாய் கூறியுள்ளார்.

# உலகின் செல்வாக்குமிக்க பிரபலங்கள் பட்டியலில் ட்ரம்ப், எலோன் மஸ்க்




அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் ‘ஹடைம்’ இதழ், ஒவ்வோர் ஆண்டும் உலகின் செல்வாக்குமிக்க 100 பிரபலங்களின் பட்டியலை வெளியிட்டுவருகிறது.

அந்தவகையில், 2025 ஆம் ஆண்டில் செல்வாக்கு பெற்ற 100 பேரின் பட்டியலை வெளியிட்டிருக்கிறது.

இதில் அரசியல், பொழுதுபோக்கு, அறிவியல் மற்றும் வணிகம் போன்ற துறைகளைச் சேர்ந்த பல்வேறு பிரமுகர்கள் இடம்பெறுவார்கள்.

இப்பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் , டெஸ்லா நிறுவனர் எலோன் மஸ்க், பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், பிரபல நடிகை டெமி மூர் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

மேலும் அமெரிக்க ராப் பாடகர் ஸ்னூப் டாக், முன்னாள் டென்னிஸ் வீராங்கனையும் தற்போதைய வணிக பிரபலமுமான செரீனா வில்லியம்ஸ், பிரபல பாடகர் எட் ஷீரன் ஆகியோரும் இதில் உள்ளனர்.

அந்த வகையில் 2025 இல் உலகின் செல்வாக்குமிக்க தலைவர்கள், பிரபலங்கள் உள்ளிட்டோருக்குக்கான பட்டியலில் இந்தியர்கள் ஒருவர் கூட இடம்பெறவில்லை.

கடந்த ஆண்டு இந்தப் பட்டியலில் இந்திய மல்யுத்த வீராங்கனை ஷாக்சி மாலிக், இந்தி நடிகை ஆலியா பட் ஆகியோர் இடம்பிடித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 18.04.2025




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயற்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவிற்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். இன்று மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பது சிறந்தது. தெளிவான மனதின் மூலம் இன்று உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் சில கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். சூழ்நிலையை திறமையாக கையாள அல்லது தவறு நேராமல் இருக்க நீங்கள் அமைதியாக செயல்பட வேண்டும்.

உங்களின் விறைப்பான தன்மை காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். உறவின் நல்லிணக்கத்தை பேண இத்தகைய உணர்வை தவிர்ப்பது நல்லது.

இன்று தேவையற்ற செலவுகளை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு சிறிது வருத்தத்தை அளிக்கும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.




இன்று சமநிலை உணர்வு காணப்படும். உங்கள் நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பொதுவாக இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

நீங்கள் பணிகளை தரமாக முடித்து தருவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்ளும் சுறுசுறுப்பு உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேச வாய்ப்புள்ளது. இது இருவருக்குமிடையே உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் நல்ல வாய்ப்பு உள்ளது. இன்று சிறிது பணமும் சேமிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பிரார்த்தனை மற்றும் தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் நன்மை பெறலாம். இதன் மூலம் தெளிவு கிடைக்கும். நம்பிக்கையான சிந்தனை உருவாகும்.

பணியில் உங்கள் நேர்மையான அணுகுமுறை சாதகமான பலன்களைத் தரும். பணியில் உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கப் பெறலாம்.

உங்கள் துணையுடனான உங்கள் அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இது இருவருக்குமிடையே நல்ல பிணைப்பை வளர்க்க உதவும்.

இன்று அதிர்ஷ்டகரமான நிதிநிலை காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பை இன்று அதிகரிக்க இயலும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.




இன்றைய செயல்களை பொறுமையுடனும் சமயோசித புத்தியுடனும் மேற்கொள்ள வேண்டும். எதிர்மறை எண்ணங்கள்உங்கள் மனதில் குழப்பம் உண்டாக்கும். அத்தகைய உணர்வுக்கு ஆளாவதைத் தவிருங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இன்றைய பணிகளை முடிக்க திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் உறவில் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் ஒத்துப் போக உண்மையான முயற்சி எடுக்கவும்.

இன்று பணம் சம்பாதிக்க குறைந்த வாய்ப்பே உள்ளது. பணம் சேமிப்பதும் கடினம். நிதி சம்பந்தமான விஷயங்களில் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

சளி காரணமாக உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் ஆலோசனையைப் பெறுங்கள்.

பணியிடத்தில் பதற்றம் காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்தால் நற்பலன் கிடைக்கும்.

உங்கள் உறவில் மனக் குழப்பம் பாதிப்பை ஏற்படுத்தும். உங்கள் கருத்துக்களை உங்கள் துணையிடம் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிக்க தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக உங்களுக்கு கால் வலி அல்லது முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உறுதி மற்றும் நம்பிக்கை உணர்வு மூலம் உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம்.

பணியிடத்தில் சிறப்பான வளர்ச்சி காணப்படுகின்றது. உங்கள் பணிகளை திறமையாக துல்லியமாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் கருத்துக்களை நட்பாக பகிர்ந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் உறவில் அன்பும் மகிழ்ச்சியும் பொங்கும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. அது உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய உதவும்.

இன்றைய நாளுக்கு தேவையான ஆற்றல் உங்களிடம் நிறைந்து காணப்படும்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக்கலாம். அதன் மூலம் ஆறுதல் மற்றும் திருப்தி கிடைக்கும். இன்று நற்பயன் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை பராமரிக்க இயலாது. விருப்பமில்லாத சூழ்நிலையை திறமையாகக் கையாள அமைதியாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பழகும்போது சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதிகம் பேசுவதை தவிர்க்க வேண்டும்.

எதிர்பாராத காரணங்களுக்காக அதிக செலவுகள் ஏற்படும். பண விஷயங்களை கண்காணியுங்கள்.

தோல் சம்பந்தமான பிரச்சினை உங்களை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.04.2025




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். அனுசரணையான போக்கின் மூலம் நன்மை கிட்டும். தடைகள் காணப்பட்டா லும் திட்டமிட்டு செயல்பட்டால் அதனை சமாளிக்க முடியும்.

கவனக்குறைவின் காரணமாக பணியிடத்தில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உறவில் நிலவும் பிரச்சினைகள் காரணமாக உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் அமைதியாக அமர்ந்து கலந்து பேச வேண்டும்.

அதிகரிக்கும் செலவினங்களை எதிர்கொள்ள நேரும். பணத்தை கவனமாகவும் சாதுர்யமாகவும் கையாள வேண்டும்.




இன்று உங்களுக்கு செழிப்பான நாள். தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். உங்கள் வளர்ச்சிக்கு உதவும் தக்க முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த் ததை விட அதிக வளர்ச்சி காணப்படும். உங்கள் மேலதி காரிகளின் ஆதரவு மற்றும் பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சில மாற்றங்களும் சில பயணங்களும் காணப்படும். தொண்டு நடவடிக்கைகள் மூலம் மகிழ்ச்சி கிட்டும். சாதாரண செயல்களை ஆற்றுவதில் கூட தாமதங்கள் காணப்படும்.

பணியிடத்தில் சில சவாலான சூழ் நிலைகளை சந்திக்க நேரும். எனவே உங்கள் பணி களை திட்டமிட்டு திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினை காணப்படும். அமைதியாக அதனை தீர்க்க வேண்டும்.

நிதிநிலைமையில் குறைந்த வளர்ச்சி காணப்படும். இன்று பணத்தை தக்க வைத்துக் கொள்வது கடின மாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஓய்வுக்கு நேரம் ஒதுக்குங்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் கிடைக்கும் நாள். திறமையாக திட்டமிட்டால் வெற்றி காணலாம். உங் களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் பணிகளை விரைவாக முடிக்க நேரலாம். உங்கள் பணிகளை எளிதாகக் கையாள உங்கள் நம் பிக்கை அணுகுமுறை உதவும்.

தம்பதியரிடையே பரஸ்பர மரியாதை நல்ல காணப்படும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்களின் பணம் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். ஸ்திரமான நிதிநிலைமைக்கான வாய்ப்பு உள்ளது.

நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




# தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக் கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கு விநியோ கிக்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளன.

எதிர்வரும் 29 ஆம் திகதி வரை இப்பணிகள் முன்னெடுக்கப்படவுள் ளன என பிரதி தபால் மாஅதிபர் பிரேம சந்திர ஹேரத் தெரிவித்தார்.

தபால் ஊழியர்களுக்கு தேவை யான ஆலோசனை வழங்கப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக் கான தபால் மூல வாக்குச்சீட்டுகள் அடங்கிய பாதுகாப்புப் பொதிகள் தபால் திணைக்களத்திடம் கையளிக் கப்பட்டுள்ளன.

06 மாவட்டங்களுக்கான பாதுகாப் புப் பொதிகள் தபால் திணைக்களத் திடம் கையளிக்கப்பட்டதாக பிரதி தபால் மா அதிபர் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக் கான தபால் மூல வாக்களிப்பை எதிர்வரும் 22, 23, 24, ஆம் திகதி களில் முன்னெடுக்க திட்டமிடப்பட் டுள்ளது.

அந்த நாள்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் 28, 29 ஆகிய திகதிகளில் தமது தபால் மூல வாக்கினை செலுத்த முடியும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மே 06ஆம் திகதி இடம்பெறவுள் ளது.